அணி - 01
ஒலி - 07

silampumagazine@gmail.com
+94 76 538 3995 / +94 76 258 3587

மாசி - 2021
வள்ளுவர் ஆண்டு - 2052

# சிலம்பு

பல்சுவை இணைய இதழ்

www.silampu.com
www.magazine.silampu.com




## ஈழத்து எழுத்துலகின் அனுபவப் பயணி

## புத்தரைத் தேடிப்போய்...

## பனம் பாளை தரும் பதநீர்

## வீறோடு கண்ட நெறி

## இவர்கள் பொருத்தமற்றவர்கள்

அறிவியல் - அரசியல் - ஆன்மீகம் - இலக்கியம் - சினிமா

மாசி- 2021 அணி - 01 இதழ் - 07
சிலம்பு
பல்சுவை இணைய இதழ்
silampumagazine@gmail.com
+94 76 538 3995 / +94 76 258 3587
www.magazine.silampu.com / www.silampu.com
வெளியீடு : அருள்ஒளி கிரியேசன்ஸ் பிறைவேட் லிமிரட்

www.magazine.silampu.com
www.silampu.com

# இவர்கள் பொருத்தமற்றவர்கள்

இலங்கை ஒரு பல்லின, பன்மத நாடு. இத்தகைய நாட்டில் சாந்தியும் சமாதானமும் நிலைக்க வேண்டுமாயின் ஆட்சியாளர்கள் சமநிலை வாதமுடையவர்களாக இருக்க வேண்டுமே தவிர இனவாத, மதவாத போக்குடையவர்கள் ஆயின் நாடு நிதமும் சபிக்கப்பட்ட நாடாகவே மிளிரும்.

இன நல்லிணக்கம் இன்மையினால் இலங்கை சுதந்திரம் அடைந்ததன் பிற்பாடு எதிர்நோக்கிய உள்நாட்டுப் பூசல்களால் அனுபவித்த கசப்பான அனுபவங்கள் கற்றுத் தெளிய வேண்டியவை.

ஒரு பௌத்த மதப் பின்னணி கொண்ட ஆட்சியாளர்களால் நிருவகிக்கப்படுகின்ற நாட்டில் சமதர்மம் நிலையாமை என்பது பௌத்தத்தில் சொல்லப்பட்டுள்ள கருத் துக்களின் பால் இவர்தம் ஈடுபாடு தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

“அன்பே தெய்வம் - யாரும் தீமை செய்தாலும் நன்மை செய்யுங்கள்” போன்ற அறக் கருத்துக்களைப் பின்பற்றுகின்ற பௌத்தர்களாக பௌத்த ஆட்சியாளர்கள் இல்லை.

இவர்கள் சிறுபான்மை இனத்தவர்களை மெலினப்படுத்துவதற்தாக நிலபுல, வாழ்வியல் அடக்குமுறைகளை அரங்கேற்றுவதன் மூலம் பௌத்த சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் தம்மை பௌத்த தலைவர்களாக நிரூபிக்கவே அதீத அக்கறை கொள்கின்றனர்.

இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் காலத்திலும் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஸ்தாபகர் காலத்திலும் ஏற்பட்ட கசப்பான அனுபவங்களை மீளவும் இவர்கள் தொடர்கின்றனர்.

இவர்கள் சபையில் கௌதம புத்த பிரானின் சீடர்களைத் தவிர்த்து காவியணிந்த காடையர்களே உள்ளனர்.

தவிர இவர்களது அமைச்சரவையில் துரியோதன சேனையினரே அங்கம் வகிக்கின்றனர்.

ஆதலால் அசோகச் சக்கரவர்த்தியின் மனதை மாற்றிய பௌத்தத்தை பின்பற்றுவோராக இப்போதைய ஆட்சியார்கள் இல்லை. ஏழு தசாப்த காலமாக இலங்கை தன் மக்கள் மத்தியில் ஆரோக்கியமற்ற சலசலப்புகளை மட்டுமே கண்டு வருகிறது.

ஏற்றத்தாழ்வுகளை மேற்கோள் காட்டும் ஆட்சியாளர் தான் இதற்கு முழுப் பொறுப்பும்.

அதிலும் தற்போதையவர்கள் எல்லோருக்கும் ஒருபடி மேல் சென்று தமது துவேசத்தனத்தை பகிரங்கப்படுத்துகின்றனர். இவ் வல்லாதிக்கத்தால் வாக்குகளை தக்கவைப்பது பொருத்தமான உத்தி என்பது அவர்களது அரசியல் வியூகம் என்பது தெள்ளத் தெளிவு. ஆதலால் இலங்கையை நிருவகிக்க இவர்கள் பொருத்தமற்றவர்கள்.

சிறுபான்மை மக்களை வஞ்சிப்பதில் அக்கறை கொண்டு இலங்கை நாட்டை ஏமாற்றுகின்றனர். இதனால் இதர நாடுகளுக்கு இணையான நாட்டின் வளர்ச்சி ஸ்தம்பிக்கப்பட்டு நாடு பின்னடைவை எதிர் கொள்கிறது.

இதனை பெரும்பான்மை மக்களும் உணரத் தலைப்பட்டுள்ளனர் என்பதே உண்மை.

அன்புடன்
இதழாசிரியர்

செல்வி ப. கிருத்தியா
தென்கிழக்கு பல்கலைக்கழகம்

# சுதந்திர தரிசனம்







காலம் காலமாய் காலடியில் கிடந்தோம்
சூரிய வெளிச்சம் கண்ணெதிரே தோன்றி
விடிவை காட்டினும் விடுதலை இன்றி
பலகாலம்...
விழித்தோம் ஒருநாள்
உணர்ச்சிகள் பொங்க
அமைதியின் அங்கமாய் - போராடி
வெள்ளையனின் காலடியை கவிழ்த்தி
சிங்க கொடியை மேலுயர்த்தி
நம்மவரை சுதந்திர காற்றை சுவாசிக்க
எம் தலைவர்கள் வெற்றி கண்ட திருநாள்.
வேட்டொலி பறக்க நாட்டின்
கொடி பட்டொளியில் மிதக்க
மூவின மக்களும் சமத்துவமாய்
ஈழ அன்னையின் பாதம் பணிவோம்
ஒருதாய் மக்களாய் இனதுவேசமின்றி - இனி
வாழும் நாட்களை வரலாறாக்குவோம்
என்ற ஆவலுடன்...

www.magazine.silampu.com
www.silampu.com

ஸ்ரீ. திவியன்



## எழுத்தாளர் - டொமினிக் ஜீவா

# ஈழத்து எழுத்துலகின் அனுபவப் பயணி




குருநகர் என்கின்ற குடியிருப்பு, யாழ்ப் பாணப் பட்டினத்துக் கடற்கரையோரப் பகுதிகளில் அமைந்த குடியிருப்பு, அங்கே ஒரு "மனித மாடு" அதாவது மனிதனை மனிதன் இழுத்து வரும் தொழிலைச் செய்கின்ற பண்டாரி எனும் ரிக்ஷாக்காரன் பண்டாரி குலத்தொழிலால் தாழ்த்தப்பட்டு, வஞ்சிக்கப்பட்டு ஒரு குடிநீர் கிணற்றில் தண்ணீர் எடுக்கமுயன்ற போது, பஸ் கண்டெக்டர் சுவாமிநாதனாலும் அவரது பிரிவினராலும் தாக்கப்படுகிறான். பின்னர் சுவாமிநாதனுக்கு விபத்து நடக்கிறது.

ரிக்ஷக்காரன் மட்டும்தான் அவனை தூக்கிச் சென்று வைத்தியசாலையில் அனுமதித்து குருதிக் கொடையும் வழங்கினான். எவனை ஒதுக்கினார்களோ, அவனது இரத்தமும் சுவாமிநாதனின் இரத்தமும் ஒன்று. பண்டாரி நினைத்திருந்தால் சுவாமிநாதன் அன்றைக்கே அவுட். ஆனால் மனிதாபிமானம், இருவரும் தொழிலாளிகள் எனும் இரண்டு எண்ணங்களும் பண்டாரியை தெய்வமாக்கியது. "சாகித்திய மண்டல பரிசு" பெற்ற இப்படி ஒரு வாழ்வியல் சித்திரத்தை உருவாக்கி "தண்ணீரும் கண்ணீரும்" எனும் காவியமாய் தந்தவர்தான் ஈழத்து எழுத்தாளர் டொமினிக் ஜீவா.

பெரும்பாலான கதைகள் இலங்கையில் தொழிலாளர்கள் படும் அவலங்களை, வாழ்வியல் சித்திரங்களை சித்தரிப்பவையாகவே அமைந்திருந்தன.

தம்முடன் தாமாகவே வாழ்கின்ற அந்தப் பாமர மனிதர்களின் ஆசாபாசங்களை, போராட்டங்களை, உணர்ச்சிக் குமுறல்களைப் புரிந்து கொள்ளாதவர்கள், புரிந்து கொண்டு தமது நிலையை தக்கவைக்க புரியாதது போல நடிப்பவர்கள் போன்ற இரண்டும் கெட்டான் பேர்வழிகள் வாழும் நாட்டில் துணிகரமாகத் தன் கருத்துக்களை, கதாபாத்திரங்களாக்கி எழுத்து வடிவம் தந்தவர்தான் நமது

www.magazine.silampu.com
www.silampu.com



ஈழத்து எழுத்தாளர் டொமினிக் ஜீவா.




தமிழக பத்திரிகைகள், சஞ்சிகைகள், வெளியீடுகள் போன்றவற்றிற்கு இருந்த மவுசு டொமினிக் ஜீவாவின் எழுத்துக் களுக்கு தரப்பட்டிருக்கவில்லை. ஏனெனில் அவரும் ஒரு தொழிலாளர் வர்க்கத்திலிருந்து வெளிவந்த எழுதுகோல். அன்றைய சமுதாயம் பிற்படுத்தப்படுத்திய பகுதியினரின் வாழ்க்கைச் சித்திரங்கள் டொமனிக் ஜீவா நமக்குத் தந்து விட்டுச் சென்ற பொக்கிஷங்கள். நிச்சயம் ஈழவர்கள் யாவரும் வாசித்து அறியவேண்டியவை.

தன் திறமைக்கு அங்கீகாரம் தேடி ஓடிய ஒரு எழுத்தாளனாகவே டொமினிக் ஜீவா தனது வாழ்கைப் பயணத்தைக் கழித்திருக்கிறார். இவரது மல்லிகையை எல்லோரும் கவர்ந்து பற்றியிருக்கவில்லை.

சில கடைகள் கூட அவற்றிற்கு முக்கியத்தவம் தநதிருக்கவில்லை என்பதும் கசப்பான உண்மை. தற்போது இவரது எழுத்துக்கள் அச்சு வடிவிலும், மின்னிதழ் வடிவிலும் நம்மத்தியில் வலம் வருகின்றன.

அவற்றைப் படித்து, டொமினிக் ஜீவாவின் ஆற்றலை மெச்சுவதே நாம் அவருக்கு செலுத்தக்கூடிய அதியுயர் புகழஞ்சலியாக இருக்கும் என்பதே உண்மை.


www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com

## விபரம்

| | | |
|---|---|---|
| பெயர் | - | டொமினிக் ஜீவா |
| புனைபெயர் | - | புரட்சிமோகன் |
| தந்தை | - | ஆவுறம்பிள்ளை |
| தாய் | - | யோசப் மரியம்மா |
| இடம் | - | யாழ்ப்பாணம் |
| பிறப்பு | - | 1927.06.27 |
| தொழில் | - | எழுத்தாளர், "மல்லிகை" ஆசிரியர், பதிப்பாளர் |
| விருது | - | சாகித்திய மண்டல பரிசு. |

# இவரது நூல்கள்



## சிறுகதைத் தொகுப்புக்கள்

| | |
|---|---|
| தண்ணீரும் கண்ணீரும் | (1960) |
| பாதுகை | (1962) |
| சாலையின் திருப்பம் | (1967) |
| வாழ்வின் தரிசனங்கள் | (2010) |
| டொமினிக் ஜீவா சிறுகதைகள் | |




## கட்டுரைத் தொகுப்புக்கள்

அனுபவ முத்திரைகள்
எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்
அச்சுத்தாளினூடாக ஓர் அனுபவ பயணம்
நெஞ்சில் நிலைத்திருக்கும் சில இதழ்கள்
முப்பெரும் தலைநகரங்களில் 30 நாட்கள்

## மொழிபெயர்ப்பு நூல்

**UNDRAWN PORTRAIT FOR UNWRITTEN POETRY** (எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்) (மொழிபெயர்ப்பு: கந்தையா குமாரசாமி, மல்லிகைகைப்பந்தல், 2004)

www.silampu.com

செல்வி சுகன்யா துரைசிங்கம் BSc Spl (Hons) (WUSL), MSc(PGIA)





# பனம் பாளை தரும் பதநீர்

தள்ளப்பாளை பங்குனி மாதந் தயவொடு
கள்ளுத் தாடு மொன்றி வாடும் கருப்பம் நீர்
வெள்ளம் வாடு மென்றிடு வாரம் மிகுவின்பம்
கொள்ள கொள்ள வுள்ள நிறைந்து குதிப்பாரே
("பனைநூறு" ச.சு.பொன்னம்பலம்)

பனைகளிலே பருவ காலத்தில் தோன்றும் பாளைகளின் நுனியில் சீவுவதனால் வடியும் பானகம் பதநீர் எனப்படுகின்றது. இதனை நீரா, பசுநறா. ஆமிர்தம், சுரம் எனப் பல பெயர் கொண்டழைப்பர். இப் பதநீரில் உடலிற்கு ஊட்டம் தரக்கூடிய உயிர்ச் சத்துக்களும் நோய்கள் அணுகாமலிருக்க மருந்துச் சத்துக்களும் காணப்படுகின்றன. மேலும் உடல் குளுமையும் எடை கூடலும் களைப்பு நீங்கலும் பதநீரினைப் பருகுவதனால் எமக்கு கிடைக்கின்றது.



பருவகாலத்தில் அரும்பும் பாளைகளைக் கட்டி இடுக்கிச் சீவி இறக்குவது கட்டுப்பாளைப் பதநீர் எனவும் ஆண் பனைப் பாளையின் அலகுகளைச் சேர்த்துக்கட்டி நுனியைச் சீவி இறக்குவது அலகுப்பனை பதநீர் எனவும் பெண் பனைப் பாளைகளில் குரும்பைகள் அரும்பிய பின்னர் பெறப்படுவது பெண் பனைப்

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com

பதநீர் எனவும் குரும்பை முற்றி கடுக்காயாக உள்ள வேளையில் இறக்குவது நுங்கு பதநீர் எனவும் கூறப்படுகின்றது.

பதநீரில் பல்வேறு வகையான ஊட்டச் சத்துக்கள் காணப்படுகின்றன. இதில் 84.75% நீர், 14.35% சுகரோஸ் இனிப்புச் சத்தும் பிரதானமாக உள்ளன. இதனைத் தவிர 0.10% புரதமும் 0.17% கொழுப்பும் குறைந்த அளவுகளில் கனியுப்புகளான கல்சியம் (0.86%), பொஸ்பரஸ் (0.052%), இரும்பு (11.01mg) மற்றும் செம்பு (0.767mg) அடங்கியுள்ளன. அத்துடன் விற்றமின் C (13.20 mg), விற்றமின் B (3.9 IU) என்பனவும் காணப்படுகின்றன.

இவ்வகையான ஊட்டச்சத்து மிக்க பதநீரானது நுண்ணங்கிகளின் தாக்கத்தினால் விரைவாக கள்ளாக நொதித்தலடைகின்றது. இவ்வாறு பதநீர் நொதித்தலடைதலினை தடுப்பதற்கு கள் மரப்பட்டை, வேப்பிலை மற்றும் சுண்ணாம்பு போன்றன பதநீர் இறக்கும்முட்டிகளில்பூசப்படுகின்றன. ஏனையவற்றினை விட சுண்ணாம்பு பூசப்பட்டு பெறப்படும் பதநீர் தரம் மிக்கதாகக் காணப்படுகின்றது. இதற்கு சூளையில் 850°C ல் 30 நிமிடங்களிற்கு வெப்பமேற்றிப் பெறப்படும் 96% தூய சுண்ணாம்பு பயன்படுத்தப்படல் வேண்டும். ஒரு லீற்றர் பதநீர் பெறப்படுகையில் முட்டிக்கு 2.5g 96% தூய சுண்ணாம்பு பயன்படுத்துதல் போதுமானதென்பது ஆய்வுகளில் நிரூபணமாகியுள்ளது. அவ்வாறு பெறப்படும் பதநீரின் அமில காரத்தன்மை (pH) 11.20 – 11.60 இற்கு இடைப்பட்டதாகவும் கரையத்தினளவு 11.0 – 12.4 வரையுள்ளதாகவும் வெளிர் மஞ்சள் நிறமானதாகவும் காணப்படுகிறது.




அதைத் தவிர்த்து அதிகளவான சுண்ணாம்பு சேர்க்கப்படுகயில் பதநீர் அதிக காரத் தன்மை கொண்டதாகவும் கருநிறமாகவும் காணப்படும்.

www.silampu.com

பதநீரில் பிரதானமாக சீனித்தன்மை அதிகமாகவுள்ளது. பருவகாலத்தின் ஆரம்பத்தில் சீனித்தன்மை (12-13°) குறைவாகவும் வேனிற்காலத்தில் அதிகமாகவும் (18-20°) இருக்கும். ஒரு மரத்தில் இருந்து 3-5 மாதங்கள் வரை சராசரியாக 15° சீனித்தன்மை கொண்ட பதநீரை 75 கலன்கள் பெறக்கூடியதாயிருக்கும். பனைப்பத நீரின் சீனித் தன்மை தென்னம் பயன்படுத்த கூடிய வகையிலும் தொழில் நுட்ப முறைகள் கண்டறியப்பட்டுள்ளன.

இவை பதநீரின் பாவனைக் காலத்தை அதிகரிக்க ஏதுவாகவுள்ளது.

பதநீரைப் பருகுவதனால் கண் களிற்கு குளிர்ச்சி, புரதங்களால் உட லிற்கு உறுதி மற்றும் தசை வளர்ச்சி ஏற்படுகிறது.



பத நீரை விட (15.9°) குறைவாக வும் கித்துளினை (9.7°) விட கூட வாகவுமிருக்கும். அதேபோல் பெண் பனையிலிருந்து (13.20°) பெறப் படும் பதநீர் ஆண்பனை பதநீரை (12.45°) விட சீனிச்சத்து கூடிய தாகவும் அடர்த்தி கூடியதாகவும் காணப் படுகிறது.

பதநீர் புளிப்படைவதை தடுப்ப தற்கு குளிரூட்டிகளில் (40°F) வைத்து 4-6 மணித்தியாலங்களும். ஆழ்நிலை குளிரூட்டியில் பனிக்கட்டியாக மாற்றம் செய்தும், சூடாக்கியும் பாய்ச்சராக்கம் செய்து ஒரு வாரமும் பாதுகாக்கப்பட முடியும். அதே போல் பதநீரை போத் தலில் அடைத்து ஆறுமாத காலம்

இதிலுள்ள இரும்புச் சத்து இதயத் திற்கு பலத்தைச் சேர்க்கின்றது.

இரத்தக் கலங்களின் விருத் தியை ஏற்படுத்துகிறது. வாய்ப்புண், சொறி, சிரங்கு, காசநோய் அணு காமல் தடுக்கின்றது. அதனைத் தவிர விற்றமின் B, மக்னீசியம் என்பன இரத் தச்சோகை, சீதபேதி போன்றவற்றுக்கு நிவாரணியாகவும் காணப்படுகின் றமை குறிப்பிடத்தக்கதாகும். இளம் பிள்ளைகளில் காதிலிருந்து கீழ்வடி தலை மாற்றவும், கண்பார்வைக் குறை பாட்டிற்கும், சரும நோயினை மாற்ற வும், பல் என்புகள் பலம் பெறவும் பத நீரினைப் பருகுதல் நன்மை பயக்கின் றது.

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com

# வீறோடு கண்ட நெறி

சீரிய சிந்தனையின்
சிதறல்களின் வழியே
சீமை எங்கும் வியாபித்து
சீரோடும் சிறப்போடும்
பொத்துவில் தொடங்கி
பொலிகண்டி வரைக்கும்




உலகமே வியந்தது
உன்னதம் நிறைந்தது
விடிவெள்ளி போல் ஒரு
புடை ஒன்று சூழ்ந்தது
அடம்பன் கொடி ஒன்று
தமிழர் தேர்வடம் ஆனது





அடக்கி ஆழ்வோர்க்கும்
அடம் பிடிப்போர்க்கும்
எச்ச நிறைவில்
உச்சி மகிழ்வோர்க்கும்
ஏகாதிபத்திய
எஜமானர்களுக்கும்





கட்டியம் கூறிய
காவிய பேர் இடி
தமிழர் சிந்தனையின்
முதற் படி
இனி காலம் எல்லாம்
அவர்க்கு தலையிடி





www.silampu.com

சாற்றிய வேதத்தை
தினம் துதி
சற்றும் சறுக்காமல்
கரம்பிடி
சாதனை புரிந்தே
தடம் பதி

ஐந்து பதின் நான்கு
ஆண்டுகளாய்
அடிமையாய் வாழ்ந்தது
போதும்
அடியோடு புறப்பட்டு
ஒரு குடை சூழ்ந்து
பலதடை கடந்து
பத்தம்சம் கோரி
பேதங்கள் துறந்து
பேரணி திரண்டு
ஓர் அணி நாம் என
பேர் எழுச்சி கண்டதும்
பெரு வெற்றி ஆனது
பார்ப்பவர் எல்லோரும்
விழிநிறைந்த மகிழ்ச்சியில்
மனம் நிறைந்த தருணம்




www.magazine.silampu.com
www.silampu.com

பன்னாட்டு அரச பார்வை
பச்சை கொடி அசைக்க
கொண்ட குறிகலைந்து
கொள்கை நெறி உடைந்து
கொடுங் கோலர் சிரிப்புக்கும்
கொள்கை அற்றோர் நகைப்புக்கும்
வென்றான ஒருநொடியில்
வேரறா பூதங்கள் கிளம்பி

வீறோடு வந்த நெறி
வீதியிலே போனதுவோ
விரைந்து செயல் ஓங்கி
விழிப்பை ஏற்படுத்தி
மீளப் பேரணிக்கு வித்தூன்றி
பேர் எழுச்சி கொள் தமிழா
பெரு வெற்றி மீள

-அருள்ஈசன்
மண்டைதீவு




www.magazine.silampu.com
www.silampu.com

சி.விதுர்ஷன்
பேராதனைப் பல்கலைக்கழகம்

# தென்னாசியாவில் சட்டவாட்சியை வலிமையாக்கும் தகவல் அறியும் உரிமைச் சட்டம்

## அறிமுகம்

நேபாளத்தில் தகவல் உரிமைச் சட்டமானது 2007ஆம் ஆண்டின் தகவல் உரிமைக்கான ஒழுங்கு விதிகள் மற்றும் தகவல் உரிமைச் சட்டத்தின் உறுப்புரை 27 இற்கு அமைய உருவாக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கான வழிகாட்டுதல்கள் என்பன மூலம் ஆளப்படுகின்றது. இந்த ஏற்பாடுகளுக்கு அப்பால் பல எண்ணிக்கையிலான வேறு நியதிச் சட்டங்களும் தகவலுக்கான உரிமையை ஒழுங்குபடுத்துகின்றன. 2007 ஆம் ஆண்டின் இடைக்கால அரசியலமைப்பின் உறுப்புரை 27ஆனது தகவலுக்கான உரிமையை ஒரு அடிப்படை உரிமையாக உறுதிப்படுத்தி உள்ளது. அது பிரஜைகள் தமக்கு தேவையெனக் கருதும் தகவல்களை பெறுவதற்கான அல்லது கோருவதற்கான உரிமையை வழங்குகின்றது. அது சட்டத்தால் பாதுகாக்கப்படும் தகவலை வழங்க கட்டாயப்படுத்தவில்லை.

நேபாளம் அரசிய யாப்பு உருவாக்கத்தில் வெளிப்படை தன்மையை பேணுவதில் மக்கள் தமது உரிமையை பயன்படுத்த தகவல் உரிமைச் சட்டம் வெற்றிகரமானதாக செயற்பட்டுள்ளது. நேபாளம் 2008 ஆம் ஆண்டு ஏப்ரல் 10 ஆம் திகதி தனது முதலா வது அரசியல் யாப்பு ரீதியான சபைக்கான தேர்தலை நடாத்தி இருந்தது. இரண்டு ஆண்டுகளில் ஒரு புதிய அரசியல் யாப்பினை பிரகடனம் செய்வதற்கு நியதிச் சட்ட ரீதியான் அதனுடைய 601 உறுப்பினர்கள் தேவைப்பட்டனர். அதனை செய்ய அது தவறிய போது 2012 ஆம் ஆண்டு மே மாதம் உயர் நீதிமன்றத்தின் உத்தரவை தொடர்ந்து இறுதியாக அது தீர்த்து வைக்கப்படும் வரை அரசியல் யாப்பு சபையின் கால எல்லை பல்வேறு சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டு உள்ளது.







அதேபோல் அண்மைகாலமாக ஆப்கானிஸ்தான் தகவல் உரிமை சட்டம் உருவாகி குறுகிய காலத்தில் 1ஆம் இடத்தில் இருப்பதை கண்டு பல நாடுகளும் அதிர்ச் சிக்கு உள்ளாகி உள்ளது. அந்த அளவு மக்களுக்கு தகவலை வழங்கும் செயற்பாட்டில் அந்த அரசு வழங்கும் முக்கியத்துவமே காரணமாகும். அதேபோல் மாலை தீவு அரசும் கடந்த காலமாக அளித்த முக்கியத்துவம் காரணமாக 16வது இடத்திலும் இருப்பது தெற்காசிய நாடுகளுக்கு ஒரு சந்தோசமான விடயமாக நோக்கப்படுகிறது. கீழே உள்ள அட்டவணையானது 2019 ஆம் ஆண்டில் தென்னாசிய நாடுகள் தகவல் உரிமைச் சட்டத்தின் பிரகாரம் அவை பெற்றுள்ள இடங்களையும், அதன் குறுகிய கால அபிவிருத்தியையும் காட்டுகிறது. இதுவே சட்ட ஆட்சியின் வளர்ச்சி தன்மையும் ஆகும்.

www.magazine.silampu.com

| தென்னாசிய நாடுகள் | பெற்ற இடங்கள் | சட்டம் உருவான ஆண்டு |
|---|---|---|
| ஆப்கானிஸ்தான் | 1 | 2014 |
| இந்தியா | 6 | 2005 |
| பாகிஸ்தான் | 33 | 2002 |
| இலங்கை | 4 | 2016 |
| நேபாளம் | 22 | 2007 |
| பங்களாதேஸ் | 29 | 2009 |

## அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு தகவல் அறியும் சட்டத்தின் தேவைப்பாடு

அபிவிருத்தி அடைந்துவரும் நாடு அல்லது அபிவிருத்தி அடைந்த நாடு என்ற ரீதியில் அந்நாட்டிலுள்ள குடிமக்களுக்கு நாட்டின் அலுவலகர்களின் செயற்பாடுகள் குறித்து அறிவதற்கு உரிமை உண்டு. ஆனாலும் மக்களுக்கு இது குறித்து தெளிவு இருக்கிறதா என்பது குறித்து சந்தேகம்தான். மேற்கத்திய நாடுகளில் மக்களிடையே இது பற்றிய விழிப்புணர்வு உண்டு. அதாவது மக்களின் வரிப்பணத்தைப் பயன்படுத்தியே ஒரு அரசு இயங்குகிறது. அரசை இயக்கும் அரசியல்வாதிகளும் மக்களின் பணத்தின் ஊடாகவே செயற்படுகிறார்கள். இவர்கள் என்ன செய்கிறார்கள், அவர்கள் இயற்றும் திட்டங்கள் செம்மையாக நடைபெறுகிறதா என்பதை, இச்சட்டத்தை பயன்படுத்துவதன் மூலம் அறியலாம்.

எமது நாட்டில் தகவல் அறியும் சட்டத்தின் அவசியம் குறித்து பிற்காலத்திலேயே மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்பட்டது. ஒரு ஜனநாயக நாட்டில் மக்கள் தகவல்களை அறிவதற்கு உரித்துடையவர் என்பது அடிப்படையான விடயம். எமது நாட்டில் கடந்த எழுபது வருடங்களில் மக்களின் தேவைகளை வலுப்படுத்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள ஆக குறைந்தளவான செயற்பாடு இதுவாகும். 1972 ஆம் ஆண்டு ஜனநாயக சோஸலிச குடியரசின் அரசியலமைப்பில் முதலாவது மக்களின் அடிப்படை உரிமை குறித்த தான சட்டவிதிகள் உள்ளடக்கப்பட்டன. இது பலன் தரக் கூடியதான போதிய தெளிவு இருக்கவில்லை. ஒருவரின் அடிப்படை உரிமை மீறப்படும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்து தெளிவான ஒழுங்கு விதிகள் இருக்கவில்லை.

ஆனாலும் 1978 ஆம் ஆண்டு கொண்டு வரப்பட்ட அரசியலமைப்பில் மக்களின் அடிப்படை உரிமை குறித்ததான தெளிவான சட்ட விதிகள் உள்வாங்கப்பட்டன. இதனடிப்படையில் ஒருவரின் அடிப்படை உரிமை மறுக்கப்படும் பட்சத்தில் அவர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யலாம். ஆனாலும் உயர் நீதிமன்றத்திற்கு போவதற்கு வசதிவாய்ப்புகளுடன் செலவிட நிதியும் இருக்க வேண்டும். எமக்கு ஒரு திறந்த உண்மையானாலும் அது இலகுவான தாக இருக்கவில்லை. எமக்கு இருந்த இச்சிரமங்கள் தற்போதைய தகவல் அறியும் சட்டத்தினூடாக குறைந்துள்ளன. ஏளிமைப்படுத்தப்பட்டு இருப்பதாகவும் சொல்லலாம்.

## இலங்கையும் தகவல் உரிமைச்சட்டமும்

1978ஆம் ஆண்டு அரசியல் யாப்பின் உறுப் புரை 14(1)(அ) இலுள்ள கருத்துச் சுதந்திரமானது, தகவலுக்கான உரிமையை உள்ளடக்குகின்றது என சில வழக்குகளில் உயர் நீதிமன்றம் தீர்த்துள்ளது. இந்த உரிமையானது அடிப்படை உரிமை மீறலாக அமையும் சூழ்நிலைக்கேற்ப வரையறுக்கப் பட்டதாகவே உள்ளது. அரசியல் யாப்பிற்கு கொண்டு வரப்பட்ட பத்தொன்பதாவது திருத்த சட்டமானது நல்லாட்சியின் அம்சங்கள் பலவற்றை அறிமுகம் செய்தது. அவைகளில் ஒன்றாக அடிப்படை உரிமையாக தகவல் அறியும் உரிமை என்பதனையும் அறிமுகம் செய்தது.

பங்குனி - 2021 இதழில் தொடரும்

www.silampu.com




# சுதந்திரத் திருநாளொன்று?



தந்திரம் கொண்ட
நாட்டில்
அந்தரித்தே வாழும்
சுந்தரத் தமிழுக்கில்லை
சுதந்திரத் திருநாளொன்று.
கண்டவர் கதிகலங்கும்
கொண்டவர் குலை நடுங்கும்
விந்தைகள் நிகழ்ந்த நாட்டில்,
சுதந்திர நாளும் உண்டோ?

வென்றவர் யுத்தம் செய்து ,
கொன்றிட்ட உயிர்கள் உலவும்
வன்முறை மலிந்த நாட்டில்
என்றோ? சுதந்திர நாள் வரும்.

தாலிக்கொடி அறுத்து
வேதனைக் கொடி வளர்த்த
கேடிகள் வாழும் நாட்டில்
சுதந்திரக் கொடியோ? ஏறும்.

தேடும் உறவுகளும்
தவிக்கும் உதிரங்களும்
மலிந்த இந் நாட்டில்
மலருமோ?சுதந்திர நாளொன்று.

- சிரபுரத்தான்

# தமிழர் நாம்...

அரசை பகைக்க என்றில்லை
அரச உரிமை எமக்கும் என்கின்றோம்

பௌத்தத்தை வெறுக்க என்றில்லை
புத்தனும் சித்தார்த்தன் என்கின்றோம்

சிலைகள் அமைக்க தடை என்றில்லை
அடையாளப்படுத்தல் வேண்டாம் என்கின்றோம்

தொல்பொருள் தேடப்பட
வேண்டியதில்லை என்றில்லை – எமது
தொல்லியலை தொலைக்க நாம்
தயாரில்லை என்கின்றோம்

இதற்கு சண்டை என்று பொருளில்லை
சமத்துவம் என்றே கேட்கின்றோம்

இனியும் போராட வலு இல்லை என்றில்லை
இனவாதம் வேண்டாம் என்கின்றோம்



அரசியல் வேண்டாம் என்றில்லை
ஆக்கிரமிப்பு வேண்டாம் என்கின்றோம்

மொழி கடந்து மதம் கடந்து
மனிதம் என்ற ஒன்றையே வேண்டும் என்கின்றோம்

-தீவகத்தி

www.magazine.silampu.com
www.silampu.com

அந்துவன்



# புத்தரைத் தேடிப்போய் அப்பன் சிவன் புலப்பட்ட கதை...

திருமாலும் பிரம்மனும் அடிமுடி தேடிய கதை யாவரும் அறிந்ததே.

அது போல தான் குருந்தூர் மலை அகழ்வாராச்சியும் முடி தேடிப்போன பிரம்மனுக்கு தாழம்பூ கிடைக்க முடியைக் கண்டு விட்டதாக பொய்யுரைத்தது போல் எண்முக தாராலிங்கம் கிடைக்க அது விகாரைத் தூணின் அடிப்பாகம் என பொய்யாக்கினர் நமது தொல் பொருள் ஆராச்சியாளர்கள்.

துரியோதன சபையில் திரௌபதி பத்தினியே அல்ல என துரியன் சூளுரைக்க செஞ்சோற்றுக் கடனுக்காக ஆமோதித்த பீஷ்மர், துரோணர், கர்ணன், சகுனி கொண்ட மகாசபை போல, தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளும் பதவித்தக்கவைப்பிற்காக புறம் பகர்கின்றனர்.

குருந்தூர் மலை தாரா லிங்கம் பல்லவர் காலத்திற்கு உட்பட்டது என்றும் இந்தியாவில் பல்லவ ஆட்சி நிலைத்த இடங்களில் இன்றும் குறித்த எண்முக தாராலிங்கங்கள் இருப்பதாயும் இருக்கக் கூடிய வரலாறை அறியாத அகழ்வாராச்சியாளர்கள் தான் இவர்கள் எனும் போதே குறித்த திணைக்களத்தின் நோக்கம் தெள்ளத்தெளிவாக புலனாகிறது.

ஆயினும் முல்லைத்தீவு மாவட்டம் குருந்தூர் மலையில் நடைபெற்ற அகழ்வாராய்ச்சியில் கிடைக்கப் பெற்ற தொல்லியல் சிதைவுகளில் காணப்படுகின்ற சிவலிங்கத்தை ஒத்த உருவம் வெறும் தூணல்ல பல்லவர் கால எட்டுப் பட்டை (எட்டு முகம்) தாராலிங்கம் என்பதை வரலாற்று ஆய்வாளர் திரு. NKS திருச்செல்வம் அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளமை, வேண்டுமென்றே









பெரும்பான்மை இன ஆட்சியாளர்கள் தமிழர்களை பலவீனப்படுத்தும் செயற்பாடுகளில் கவனம் செலுத்துவதாகவே ஊர்ஜிதமாகின்றது.

“அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும்” என்பார்கள். அதற்கு சான்று பகர்வதைப் போல புத்தர் இருப்பார் என்று தேடிப் போனவர்களுக்கு பாடம்புகட்டும் விதமாக எண்முக தாராலிங்கம் வெளிப்பட்டது புதுமையிலும் புதுமை.

பெரும்பான்மை மக்களைத் திருப்திப்படுத்துவதற்காக பொய்யுரைக்கும் ஆட்சியாளர்களை உளவியல் ரீதியிலேனும் தண்டித்திருப்பார் ஈசன் சிவன். தெய்வம் நின்று கொல்லும் என்பதனை அவர்கள் உணர்வார்களா? என்பது வினவுதற்குரியது.

குருந்தூர் மலை விவகாரம் சூடுபிடித்த காலமுதல் குமிழமுனை, தண்ணிமுறிப்பு, ஆறுமுகத்தான்குளம் போன்ற இடங்களில் வாழ்கின்ற வயதானவர்கள் இவ்விடத்தில் நிச்சயம் நமது கடவுளர்களின் சின்னங்கள் அகழ்வாராச்சியின் போது புலப்படும் என்பதைக் கூறியதாக செய்திகள் வெளியானதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவேயும், 01.10.2020ஆம் திகதி தமிழர்கள் வழிபாடு நிகழ்த்திய போது குருந்தூர் மலையில் திரிசூலம் உட்பட்ட வழிபாட்டுச்சின்னங்கள் காணப்பட்டன. இவற்றை புறந்தள்ளி கபடநோக்கத்துடனேயே, ஆட்சியாளர்கள், படையினரின் கெடுபிடிப் பாதுகாப்பைத் திணித்து தமிழர்களுக்கு தெரியாத வகையில் தகவல்களை மறைத்து களத்தில் இறங்கினர்.

ஆனால் பக்த பிரகலாதன் கூறியபோது “நரசிம்மர்” தூணிலிருந்து வெளிவந்தது போல, அகழ்வராச்சியின் போது குருந்தூர் மலையின் ஈசன் எண்முக தாரா வடிவில் வந்து நொந்துபோய்க் கிடந்த தமிழர் நெஞ்சங்களுக்கு பால்வார்த்தான் என்பதனை எண்ணும் போதெல்லாம், “தென்னாடுடைய சிவனே போற்றி; எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி” என்றே மனம் தியானிக்கிறது.



கூந்தூர் முருகன் கும்பகோணம் | குருந்தூர் முல்லைத்தீவு

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com

# குட்டிக் கதை

# உயிரா? பணமா?



வைர வியாபாரி ஒருவன் தன் வைரங்கள் அனைத்தையும் விற்று விட்டு பணத்தை ஒரு மூட்டையில் கட்டிக்கொண்டு தன் சொந்த ஊருக்கு வந்து கொண்டிருந்தான். அவன் தன் ஊருக்கு செல்ல ஒரு ஆற்றை கடக்க வேண்டி இருந்தது.

ஆனால் எதிர்பாராத விதமாக அந்த ஆற்றில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது.

வெள்ளத்தை பொருட்படுத்தாத வைர வியாபாரி நீரில் இறங்கி எப்படி யாவது ஆற்றை கடந்து சென்றுவிடலாம் என்று எண்ணி அந்த ஆற்றில் இறங்கினான். அப்போது வெள்ள நீர் அவனை நிலை தடுமாற செய்தது.

இதனால் அவன் தன் பண மூட்டையை வெள்ளத்தில் தவறவிட்டான். உடனே ஐயோ என் பண மூட்டையை வெள்ளம் அடித்து செல்கிறதே யாரேனும் காப்பாற்றுங்கள் என்று கதறினான்.

அந்த ஆற்றில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒரு மீனவனின் காதில் இந்த வைர வியாபாரியின் கதறல் சத்தம் கேட்டது.

உடனே அவன் ஆற்றில் குதித்து கடுமையாக போராடி அந்த பண

www.silampu.com

மூட்டையை எப்படியோ மீட்டு எடுத் துக் கொண்டு கரையை அடைந்தான்.

பின் இந்த பண மூட்டையை காப்பாற்ற சொல்லி யாரோ கதறி னீர்களே, நீங்கள் எங்கு இருக்கிறீர்கள்? நான் உங்கள் பண முட்டையை மீட்டுக் கொண்டு வந்து விட்டேன். வந்து பெற் றுக்கொள்ளுங்கள் என்று சத்தமாக அழைத்தான்.

ஆனால் வெகு நேரம் ஆகியும் யாரும் அதை பெற்று கொள்ள வர வில்லை.

பிறகு தான் அவனுக்கு புரிந்தது, அந்த பண மூட்டைக்கு சொந்தக் காரர் ஆற்று வெள்ளத்தில் அடித்து செல்லப்பட்டார் என்று.

ஐயோ பாவம், அந்த பணக்கா ரர் இந்த பண மூட்டைக்கு பதிலாக தன்னை காப் பாற்றுங்கள் என்று குரல் கொடுத்திருந் தால் இந்த பண மூட்டையை விடுத்து, நான் அவரை காப்பாற்றி இருப்பேனே.

ஆனால் அவர் இப்படி செய்துவிட் டாரே என்று அந்த மீனவன் வருந் தினான்.

இப்படி தான் நாமும் நம் தேவை களை சில நேரங்களில் இறை வனிடம் சரியாக வேண்டாமல் வெறும் பணத்தை மட்டுமே வேண்டுகிறோம்.

அதனால் பல நேரங்களில் நாம் நம் வாழ்வில் நிம்மதியை இழக்க நேரிடுகி றது.

# எண்ணமும் எழுத்தும்...



உங்கள் எண்ணத்தில் உதிக்கின்ற வரிகளை கவிதையாக்கி அனுப்புங்கள். சிறந்த முதல் மூன்று கவிதைகளுக்கும் சான்றிதழ் வழங்கப்படும்.

4 தொடக்கம் 8 வரிக் கவிதையுடன்
முழுப்பெயர்,
தபால் முகவரி,
தொடர்பு இலக்கம் என்பவற்றை சேர்த்து அனுப்புங்கள்.
முடிவு திகதி: 10.03.2021.

தபால் முகவரி: அருள்ஒளி கிரியேசன்ஸ்
இல.73, பிறவுண் வீதி, நீராவியடி.
யாழ்ப்பாணம்.

வட்ஸ் அப் : **+94 76 53 83 995**

www.magazine.silampu.com

www.silampu.com

www.magazine.silampu.com

# அப்படிப் பார்க்காதீர்கள்



நிமிர்ந்து நடக்கும் பெண்ணிடம்
நெஞ்சு தெரியும்....

எதிர் எதிரே அமர்ந்தால் இடுப்பு தெரியும்...

நெருங்கிப் பார்த்தால் மார்பு தெரியும்...

தொடை இடுப்பு என ஒவ்வொன்றாய்
தொட்டு விடத் தோன்றும்...

அவள் மேலாடைகளில் துவங்கி
உள்ளாடைகள் வரை
ஒரு வித போதை இருக்கிறது ஒருசிலருக்கு....

ஆம், அவளிடம் போதை இருக்கவே செய்கிறது....




பிறந்த அரை மணி நேரத்தில்
அவள் மார்புக் காம்புகளில்
உறிஞ்சிக் குடிக்கும் உயிர் பாலில் துவங்குகிறது
ஒரு மனிதனின் சராசரி போதை....

அரை வயிறு, கால் வயிறு என்று
காய்ந்து போகாமல்
உன் வயிற்றை நிரப்பி விட்டு
அடுத்த வேளைக்கு உணவு சமைக்கும்
அம்மாவின் முந்தானைச் சேலைத்
தொட்டிலுக்கு ஒரு முழு போதை உண்டு...
தவறி விழும் போதெல்லாம்
தாங்கிப் பிடித்து மடியில் சாய்த்து

www.silampu.com

தலைகோதி முத்தமிட்டு
உன் நெஞ்சைத் தட்டிக் கொடுக்கும்
உன் அக்காவின் விரல்களுக்குள்
ஒரு வித்தியாச போதை உண்டு.....



பள்ளியில் தோழியாய் ....
கல்லூரியில் நண்பியாய்...
பங்கு கொடுத்து பரிமாறி
உண்ணும் உணவிலெல்லாம்
அம்மாவின் சாயலை ஒத்து இருக்கும்
கண்களில் ஒரு தீராத போதை உண்டு....

மறக்கவே முடியாத காதல்...
விட்டுக் கொடுக்காத மனைவியென....

உங்களைச் சுற்றி ஓராயிரம் பெண்கள்
யாரோ ஒருவரின் போதைக்கு
சொந்தக்காரர்களாய் வலம்
வந்து கொண்டு இருப்பார்கள்...

அனுதினமும் அங்கொன்றும் இங்கொன்றுமாய்
வயிற்றை அறுத்தோ,கிழித்தோ
குழந்தையைப் பெற்றுக் கொள்ளத் தீர்மானிப்பதில்
இருக்கிறது பெண்களின் துணிச்சல்....

பெண்ணின் உறுப்பும் மார்பகங்களும்
காமம் நிறைந்ததாய் மட்டுமே பார்க்கும்
ஒரு சில ஆண்கள் இருக்கும் வரை கடவுளைக் கூட
காப்பாற்றித் தான் வைக்க வேண்டும்....

பிறக்கும் போதும் இறக்கும் போதும்
நிர்வாணமாய் கிடக்கும் இந்த உடல் மீது தான்
உங்களுக்கெல்லாம் தீராத போதை என்றால்
உங்களையெல்லாம் பிரசவிக்காமலேயே
இருந்திருக்கலாம்.....

சமூக வலையிலிருந்து சிக்கிய பதிவு...

www.magazine.silampu.com
www.silampu.com

# மகாத்மா காந்தியின் சிறை வாழ்க்கை

மகாத்மா காந்தி சிறையில் இருந்த போது ஸ்மட்ஸ் என்ற மகா கொடியவன் ஜெயிலராக இருந்தான். எல்லாக் கைதி களையும் எலும்பு ஒடிய அடிப்பவன். திியை அடிப்பதை நிறுத்தினான்.

ஆனால், காந்தியை அவ்வப் போது உற்றுப் பார்த்தான். இலேசாகப் புன்முறு



காந்தியையும் கீழேதள்ளி, பூட்ஸ் காலால் பலமுறை மிதித்தான், அடித் தான். அடிக்கும்போது எல்லோரும் ஐயோ! என்று அலறினார்கள்.

ஆனால், காந்தி மட்டும் "ராம்! ராம்!!" என்று சொன்னது, அவனை மிகவே-யோசிக்க வைத்தது. அன்று முதல் காந்

வல் காட்டினான். ஒரு நாள் "மிஸ்டர் காந்தி"!எ ன்று கனிவாக அழைத்துநான் உங்களுக்கு ஏதாவது உதவ நினைக் கின்றேன் என்ன வேண்டும் என்றான்? ஏதாவது புத்தகம் கொடுங்கள் என்றார் காந்தி. அவன் "பைபிள்" சார்ந்த இரு நூ ல்களைப் பரிசாக கொடுத்தான். இந்தத் தொடக்கம் நட்பாக மாறியது வளர்ந்தது.

www.magazine.silampu.com
www.silampu.com

ஒரு நாள் காந்தியிடம் வந்த ஸ்மட்ஸ், நான் உங்களுக்கு ஒரு மகிழ்ச் சியான செய்தியையும், ஒரு வருத்த மான செய்தியையும், கொண்டுவந் துள்ளேன் என்றான். மகழ்ச்சி எது? வருத்தம் எது? என்று கேட்டார் காந்தி. இன்று உங்களுக்கு விடுதலை. இது மகிழ்ச்சியானசெதிஆனால்,உங்களைப் பிரிய என்னால் முடியவில்லை. இது வருத்தமான செய்தி என்றான் ஸ்மட்ஸ். காந்தி சொன்னார், “நானும் உங்களுக்கு ஒரு பரிசு தருகிறேன் என் நினைவாக வைத்துக் கொள்ளுங்கள்” என்று சொல்லி, தான் சிறையில் தைத்த பூட்சை அவரிடம் கொடுத்தார்.

ஆவலோடு அணிந்து பார்த்த ஸ்மட்ஸ் கேட்டான், “இவ்வளவு துல்லிமாகத் தைக்க, என் கால்களின் அளவு எப்படிக் கிடைத்தது” என்று கேட்க, சிரித்தபடி காந்தி தனது மார்புத் துண்டை அக-ற்றினார் ஆரம்பத் தில் ஸ்மட்ஸ் கால-ால் உதைத்தபோது ஏற்பட்ட வடுக்கள் அங்கு இருந்தன. “இந்த வடுக்களை அளந்துதான் தைத்தேன்” என்று காந்தி சொன்னார்.

“தடால்” என்று சத்தம் ஸ்மட்ஸ் கீழே விழுந்து காந்தியின் கால்களைப் பிடித்துக் கதறினான். “நான் மிருகம்! கொடிய, கேவலமான, மிருகம்!! என்னை மன்னித்து விடுங்கள். இனி யாரையும் அடிக்க மாட்டேன்” என்றார். ஒரு நிமிடத்தில், ஒரு கொடிய மிருகம், மென்மையான மனிதனாக மாறியது. “கல்லையும் கனியாக மாற்றலாம்” என்று இதைத்தான் சொன்னார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

ஸ்மட்ஸ் சத்தியம் செய்தான். “இந்த பூட்ஸ்தான் இனி எனக்குக் கடவுள் இதை மட்டுமே வணங்குவேன்” அணிய மாட்டேன் என்று சொல்லி அந்த பூட்சை தன் பூஜை அறையில் வைத்து அப்படி-யே

வணங்கினான். “நாம் நினைத் தால், யாரையும் மன்னிக்கவும் முடி யும். மாற்றவும் முடியும்”. மன்னிக் கின்ற மனம் தான் மனிதனை மகாத் மாவாக மாற்றும். அன்பே சிவம்!!! கருணையே யேசு!!! நற்பண்பே நபி கள்!!!! மனிதன் மகிழ்வுடன் ஒற்றுமை யுடன் வாழ்ந்திட மாமனிதமே மிகச் சிறந்த பண்பு.



www.magazine.silampu.com
www.silampu.com



# ஆட்டுக்குட்டிகள் பராமரிப்பு முறை

ஆட்டுப் பண்ணையில் வெற்றி தோல்வி களை தீர்மானிப்பது குட்டிகளின் பிறப்பு மற்றும் இறப்பு விகிதம்.

ஆட்டுப் பண்ணையில் குட்டிகள் பரா மரிப்பில் முக்கியத்துவம் செலுத்துவது மிகவும் அவசியமானதாக உள்ளது.

ஒரு குட்டி இறந்தால் அதனை ஈடு செய்வதற்கு மீண்டும் ஆறு மாதம் வரை காத்திருக்க வேண்டி இருக்கும்

பண்ணைகளில் ஆடுகள் குட்டி ஈன்றவுடன் குட்டியின் வாய் மற்றும் மூக்குத் துவாரத்தில் ஒட்டியுள்ள கோழை என்று சொல்லப்படும் சளி போன்ற ஒருவகை திரவத்தை சுத்தம் செய்ய வேண்டும். இதனால், குட்டிக்கு மூச்சுத் திணறல் ஏற்படுவது தவிர்க்கப் படும். மேலும், தொப்புள் கொடியை 3 செ.மீ. விட்டு வெட்டி கிருமி தொற்று நீக்கி தடவவேண்டும்.

தாய் மற்றும் குட்டிகளை தொந்தரவு செய்யாத இடத்தில் தனிமைப்படுத்தி வைக்க வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் தாய் ஆட் டின் கவனம் சிதறாமல். குட்டிகள் மீது இருக்கும்.

குட்டிகள் பிறந்த அரை மணி நேரத் திலிருந்து 2 மணி நேரத்திற்குள் சீம் பால் குடிக்கச் செய்ய வேண்டும். சீம் பாலில் நோய் எதிர்ப்புத் திறன் கொண்ட குளோபுலின் புரதம், வைட்டமின் ஏ,டி,ஈ போன்றவை அதிகம் இருப்பதால் குட்டிகளை நோயிலிருந்து காக்கிறது. மேலும், குட்டிகளின் வளர்ச்சியும் அதி



www.magazine.silampu.com
www.silampu.com

கரித்து, நோய் தாக்குதலால் குட்டிகள் இறப்பது தடுக்கப்படுகிறது.

2 அல்லது 3 குட்டிகள் ஈனும் போது, தாய் ஆட்டில் பால் குறைவாக இருக்கும். அப்போது ஈன்ற மற்ற ஆடுகளின் பாலைக் குடிக்கச் செய்யலாம் அல்லது பசும் பாலுடன் சரிபாதி அளவு சுத்தமான தண்ணீர் கலந்து கொடுக்கலாம்.

இவ்வாறு 3 முதல் 4 வாரங்கள் வரை குட்டிகளுக்கு பால் கொடுக்க வேண்டும்.

செம்மறி ஆட்டுக் குட்டிகளாக இருந்தால் பசும் பாலில் தண்ணீர் கலக்காமல் அப்படியே கொடுக்கலாம்.

பண்ணை நுணுக்கம் அறிந்த பண்ணையாளர்கள் தங்கள் ஆடுகள் மூன்று குட்டிகள் ஈனுவதை விரும்ப மாட்டார்கள். காரணம் குட்டிகளின் பராமரிப்பு குறைவடையும்.

குறுகிய காலத்தில் குட்டிகளுக்கு கிடைக்கவேண்டிய சராசரி வளர்ச்சி வீதம் தடைப்படும்.

குளிர், பனிக் காலங்களில் ஆடுகள் குட்டி ஈனுவதை தவிர்க்கும் அளவிற்கு. திட்டமிட்டு ஆடுகளை இனச்சேர்க்கை செய்ய வேண்டும்.

குளிர்காலங்களில் பிறக்கும் குட்டிகள் இறக்க வாய்ப்புள்ளது. இவற்றைத் தவிர்க்க, கொட்டகைகளில் தடுப்புகள் அமைத்து காய்ந்த புல், வைக்கோல், உலர்ந்த துகள்களைப் பரப்பி வெது வெதுப்பான நிலையை ஏற்படுத்த வேண்டும்.

உஷ்ணக் கருவி, மின் விளக்குகளை எரியவிடுவதன் மூலமும் வெப்பத்தை அதிகரிக்கலாம்.

அதோடு கோடை காலங்களில் பிறக்கும் குட்டிகளுக்கு வெப்பத்தைக் குறைக்க, கூரை மீது நீர் தெளித்தல். அல்லது கூரையினை உயரமாகவும் காற்றோட்டமாகவும் இருக்குமாறு கொட்டகை அமைக்கவேண்டும்.

சுத்தமான பாத்திரத்தில் குடிநீர் வைக்க வேண்டும்.

முதல் 6 மாதங்களுக்கு 45 நாட்களுக்கு ஒருதடவை குட்டிகளுக்கு குடல்புழு நீக்கம் செய்ய வேண்டும்.

2 முதல் 3 மாத குட்டிகளுக்கு நாடாப்புழு தாக்க வாய்ப்புள்ளதால் முதலில் அதற்குரிய மருந்தை அளிக்கவும், அதன் பிறகு உருண்டைப் புழு நீக்கமும் செய்ய வேண்டும்.

## நோய்த் தடுப்பு நடவடிக்கை

துள்ளுமாரி நோயைத் தடுக்க 6ஆவது வாரத்திலும், கோமாரி நோய்க்கு 2ஆவது மாதமும், அம்மை, வெக்கை சார்பு நோய்க்கு 3ஆவது மாதமும் தடுப்பூசி போட வேண்டும். அடைப்பான்

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com



நோய்க்கு 6 மாத வயதில் நோய் கண்ட பகுதிகளில் மட்டும் போட வேண்டும்.

6 மாதங்களுக்கு மேல் ஒவ்வொரு ஆண்டும் துள்ளுமாரி நோய் மற்றும் கோமாரி நோய்க்குத் தடுப்பூசி போட வேண்டும்.

திறந்தவெளி மேச்சல் முறையில் இயற்கையாக ஆடுகளை வளர்க்கும் பண்ணையாளர்கள் குட்டிகளுக்கு மட்டுமே முன்கூட்டிய தடுப்பூசி போட வேண்டும்.

குட்டிகளுக்கு புற ஒட்டுண்ணிகளான பேன், உண்ணி, தெள்ளுப் பூச்சிகள் இருப்பின் அவற்றை நீக்க 15 நாள் களுக்கு ஒரு முறை மருந்துக் குளிய லுக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொலைநோக்கு சிந்தனை உடைய பண்ணையாளர்கள் தங்கள் பண்ணையில் உள்ள ஆடுகள். குட்டி ஈன்று இரண்டு மாதங்களுக்குப் பின்பே தாய் ஆட்டினை இனச்சேர்க்கைக்கு உட்படுத்த விரும்புவார்கள்.

காரணம் ஆரம்பகட்டத்தில் குட்டிக்கு தேவையான சரியான வளர்ச்சி கிடைக்க வேண்டும் என்பதற்காக.

இனவிருத்திக்கு விடக்டிய கிடா குட்டி களை விடுத்துஏனைய கிடா குட்டி களுக்கு 45 நாட்களில் நலத்தட்டல் செய்ய வேண்டும்.

இவ்வாறு செய்வதனால் மிக விரைவில் குட்டிகளின் உடல் இடை அதிகரிக்கும்.

நலத் தட்டல் செய்வதன் மூலம் சராசரியாக ஒரு கிடா ஆட்டின் நிறையி லிருந்து மேலதிகமாக 10 கிலோ வரை அதிகரிக்கும்.



வளர்த்த தாயின் முதுகில்
ஏறி பெற்ற தாய்க்கொரு
முத்தம்.. அழகு..

www.silampu.com

# அதை இப்ப நினைச்சாலும் மலைப்பா இருக்கு

## கே.ஆர்.விஜயா

விகடனுக்கு அளித்த பேட்டி



விஷாலின் 'சக்ரா' திரைப்படத்தில் ஷ்ரதா ஸ்ரீநாத், ரெஜினா கஸாண்ட்ரா, ஷ்ருஷ்டி டாங்கே ஆகியோருடன் கே.ஆர்.விஜயாவும் நடித்திருக்கிறார். யாருக்குத்தான் அவரைப் பிடிக்காது! நீண்ட இடைவெளிக்குப் பிறகு, நடிக்க வந்திருப்பவரிடம் பேசினோம்.

'சக்ரா' படத்தில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு நான் ஒன்றும் நடிக்கவில்லையே?" எனத் தயங்கியபடியே பேசினார் நடிகை கே.ஆர்.விஜயா.

**நீண்ட இடைவெளிக்கு அப்புறமா உங்கள திரைல பார்க்கிறோம். "சக்ரா" பட அனுபவம் பற்றி...**

'சக்ரா' படத்தில் சொல்லிக்கொள்ளும் அளவுக்கு நான் ஒன்றும் நடிக்கவில்லையே?" எனத் தயங்கியபடியே பேசினார் நடிகை கே.ஆர்.விஜயா.

சக்ரா படத்துக்காக என்னை அணுகியிருந்தப்போ முக்கால்வாசி கதையைமுடிச்சிருந்தாங்க. அந்த நேரத்துலதான் கெஸ்ட் ரோல் பண்ண என் கிட்ட கேட்டாங்க. உங்கள மாதிரி ஆர்ட் டிஸ்ட் பண்ணினா ப்ராமினென்ட்டா இருக்கும்னு சொன்னாங்க. நான் பண் றேன்னு சொன்னேன்."

**"கொரோனா டைம்ல சக்ரா பட வேலைகள் எப்படிப் போனது?"**

கொரோனா பரவல் ஆரம்பிக்குறதுக்கு முன்னாடியே படத்தை எடுத்து முடிச்சுட்டாங்க. பினிஷிங் சீனும் சின்ன பேட்ச் வொர்க்கும் இருந்துது. அதை மட்டும் கடைசியா எடுத்தாங்க. படத்தை ரொம்பார்ட் டைம்ல ஃபாஸ்ட்டா எடுத்து முடிச்சிட்டாங்க. கொரோனா வந்ததால அப்டியே இழுத்து ஒன் இயர் கேப் ஆகிடுச்சு."

ஷ்ரதா ஸ்ரீநாத், ரெஜினா கஸாண் ட்ரா, ஷ்ருஷ்டி டாங்கேன்னு மூணு ஹீரோயின்கள் சக்ரா படத்தில் நடிச்சிருக்காங்க. அப்போ இருந்த ஹீரோயின்களுக்கும் இப்போ இருக்குறவங்களும் நிறைய வித்தியாசங்கள் இருக்கா?"

"இப்போ இருக்குற யாரோடும் எனக் குப் பழக்கம் கிடையாது. அதுக்காக அவங்களைத் தெரியாதுன்னு சொல்றதும் தப்பு. வேணும்னே சீனி யர் ஆர்டிஸ்ட்கள் தெரியாதுன்னு சொல்றதாகூட அவங்க நினைச்சிக்கலாம். ஆனா, அது அப்படிக் கிடையாது. நாங்க முன்ன மாதிரி அதிகம் மேகஸின்ஸ் படிக்குறதோ, நாளைக்கு என்ன நடக்கப் போகுதுன்னு பெருசா எதையும் ஃபாலோ பண்றதோ கிடையாது. படங்களுக்கு கதை கேக்குறப்போ அந்தக் கதையையும் கேரக்டரையும் மனசுல உள்வாங்கிக்குவோம். அதுக்கப்புறம், நடிப்பு மட்டுமல்லாம குடும்பம், பொறுப்புகள், வேலைகள்ன்னு அப்படியே போயிடும். நாங்க முன்ன மாதிரி அப்டேட்டடா சினிமாவை அதிகம் கவனிக்கிறது இல்லைங்குறதுதான் உண்மை."

**"முன்னாடி இருந்த மாதிரி இப்போ நல்ல கதைகள் படங்களுக்கு அமையுறது இல்லைன்னு நினைச்சு இருக்கீங்களா?"**

காலங்கள் மாறுது இல்லையா. அந்தக் காலத்துல இப்போ இருக்குற அளவுக்கு வசதிகள் கிடையாது. கம்ப்யூட்டர் வசதிகள் கிடையாது. இப்போ ஹாலிவுட் படங்கள்போல எல்லாம் வேகம் வேகமா போகுது. அந்தக் காலத்துல ஒரு குழந்தை பொறக்குறது, வளர்ந்து படிக்கிறது, ஸ்கூலுக்குப் போறது,

www.magazine.silampu.com
www.silampu.com





அப்புறம் டீனேஜ்க்கு வர்றது, வயசுக்கு வர்றது முதல் கல்யாணம் பண்ணிக் கொடுக்குறது, அவ தாய் ஆகுறது, மாமியார் ஆகுறதுன்னு கதைகளும் வேற வேற பரிணாமங்களை எடுத்துச்சு. கதைக்களமும் அருமையா இருந்துது. ஒவ்வொரு கதாபாத்திரமும் பவர்ஃபுல்லா இருந்துச்சு.

அப்பவெல்லாம் சினிமாவுக்குள்ள வந்தவங்க நாடக கம்பெனியில இருந்து வந்தவங்க. தங்களோட கடின உழைப்பு மட்டுமல்லாம கதை, சென்டி மென்டுகள்னு தங்களை ஒவ்வொரு கதாபாத்திரமா வும் அழகா விரைவா செதுக்க கத்துக் கிட்டிருந்தாங்க. இப்போ அந்த மாதிரி சென்டிமென்ட்டுகள் எல்லாம் படத்துல வர்றதும் இல்ல. நாம கொஞ்சம் மாடர்ன் ஆகிட்டோம், எமோஷன்களுக்கோ கதைகளுக்கோ பெரிய அளவு முக்கியத்துவம் கொடுக்கிறதில்ல. அதுக்காக அதை நம்ம தப்புன்னு சொல்ல முடியாது. ஒவ்வொரு காலகட்டத்துக்கும் எந்த மாதிரியான படம் நல்லா போகுதோ அதையே திரைத்துறையினர் ஃபாலோ பண்ணுவாங்க அவ்ளோதான்."

**"லாக்டௌன் நாள்கள் உங்களுக்கு எப்படிப் போச்சு?"**

"கொரோனா பீரியட்ல பூரா ஓல்ட் மூவீஸ்தானே டிவியில போட்டுட்டு இருந்தாங்க. அதனால நிறைய பழைய படங்கள் பார்க்குற மாதிரியான சூழல் எங்க வீட்டுல அமைஞ்சது. அம்மா இதுல நல்லா பண்ணி யிருந்திருக்கீங்க. இன்னைக்கு வரைக்கும் பாக்காம விட்டுட்டோமேன்னு என் பிள்ளைங்க புதுசா பார்க்குற மாதிரி என் படங்களைப் பார்த்து கமென்ட்ஸ் சொன் னாங்க. இத்தனை வருஷங்கள் ஆனாலும் ரசிச்சுப் பர்க்குறாங்க இல்லையா! நிச்சயமா அதுக்கு எல் லாம் வேல்யூ இருக்கு!"

**"சமீபத்துல நீங்க ரொம்ப ரசிச்சு பாத்தா ஒரு தமிழ் படம்?"**

"இப்போ சமீபத்துல ரொம்ப ரசிச்சு பார்த்தது நயன்தாரா நடிச்சிருந்த மூக்குத்தி அம்மன் திரைப் படம்தான். ரொம்ப நல்லா இருந்துது. ஹசம் சேஞ்' அதுல கவனிக்க முடிஞ்சுது. ஒரு கமர்ஷியல் படத்தை பக்தியாகவும் சரி, காமெடியாகவும் சரி, ரொம்ப நேர்த் தியா வடிவமைச்சிருந்தாங்க."

**"நீங்க நிறைய சாமி படங்கள்ல நடிச்சிருக்கீங்க... இந்தப் படம் பார்த்தப்போ எப்படி இருந்துச்சு?"**

"படத்துக்கு படம் எல்லாமே வித்தியாசம் இருக் கணும் இல்லையா. அப்போதானே ஆடியன்ஸ் க் கும் இன்ட்ரெஸ்டிங்கா இருக்கும். வாழ்க்கைங்கு றதே காமெடி, கஷ்டம், துக்கம், சந்தோஷம்னு எல் லாம் கலந்ததுதானே. அது சாமி படங்களுக்கும் பொருந்தும். வல்கராக மட்டும் போகக் கூடாது. அதைத் தவிர எல்லா மாதிரியும் இருக்கலாம். எந்தத் தப்பும் கிடையாது!"

**"இப்போ இருக்குற இயக்குநர்கள்ல யாரை ரொம்ப பிடிக்கும்?"**

"இப்போ வர்றவங்கள்ல முக்கால்வாசிக்கு மேல புது ஆளுங்கதானே. பெருசா சினிமாவை ஃபாலோ பண்ணாததால அவங்க எல்லாம் அவ்ளோ பழக்கம் கிடையாது. தெரியாததைப் பத்தி நான் எதுவும் சொல்லக் கூடாது. இந்தக் காலத்துல வர்ற பல படங்கள்லயும் நடிப்புக்கு முக்கியத்துவம் கிடையாது. ஆனா, அதையும் தாண்டி சில படங்களை டெக்னி–கலா ரொம்ப இன்ட்ரெஸ்டிங்கா பண்றாங்க. ரொம்ப நல்ல விஷயம்!"

**உங்களுடைய முதல் படமான 'கற்பகம்' உங்கள் சினிமா வாழ்க்கைக்கு மிக பெரிய டர்னிங் பாய்ன்ட் இல்லையா?**

"கற்பகம் படத்துல நடிக்கும்போது எனக்கு பெரிய படிப்பு கிடையாது. 15 வயசுதான் எனக்கு அப்போ. பெரிய நாலெட்ஜ் எல்லாம் கிடையாது. என்ன சொல்லிக் குடுக்குறாங்களோ அதை நடிச்சு பழகி னேன். எனக்கு சினிமாதான் படிப்பு. சொல்லப் போனா, ராமாயணம் மகாபாரதம் ஆகட்டும், காந்தி, நேருஜி பத்தியெல்லாம்கூட சினிமா வாயிலாதான் நான் கத்துகிட்டேன். அது என்னமோ எங்க வீட்ல எல்லாருமே படிச்சவங்க. நான் மட்டும்தான் அதுல சேராத ஆளு."



www.magazine.silampu.com
www.silampu.com




**"500 படங்களுக்கு மேல நடிச்சிருக்குறீங்க... அந்த அனுபவம் பற்றி..."**

"அம்மாவுக்கு பூர்வீகம் கேரளா, அப்பாவுக்கு ஆந்திரா. எங்க வீட்டுல மொத்தம் 8 குழந்தைங்க. அதுல நான்தான் மூத்தவள். அப்பா மிலிட்டரில இருந்தவரு. மாமா, அப்பான்னு எல்லாரும் மிலிட்டரில இருந்தவங்கதான். செகண்ட் வேர்ல்டு வார் எல்லாம் அந்த நேரத்துலதான் முடிஞ்சிருந்துது. மிலிட்டரியில இருந்திருந்தாலும் கூட சினிமா மேல அப்பாவுக்கு ரொம்ப இஷ்டம். நாங்க ஆந்திராவுல இருந்தப்போ அவருக்குப் பிடிச்ச நடிகர்கள்ல ஒருத்தரோட வீட்டுக்குப் பக்கத்துலயேதான் இருந்தோம். நிறைய நடிகர்களை அவருக்குத் தெரியும். அதுவும் இல்லாம அந்தக் காலத்துலேயே அவருக்கு நிறைய சினிமா மோகம் உண்டு. அதனாலேயே அம்மாவும் அப்பாவும் சேர்ந்து பொண்ணை ஆர்ட்டிஸ்ட் ஆக்கிடணும்னு நினைச்சாங்க. அதுல நான்தான் மாட்டிக்கிட்டேன். நிறைய பொறுப்புகளும் கடமைகளும் இருந்ததால அதுவே என்னை நிறைய மோல்டு செஞ்சிருந்தது.

நான்தான் இவ்ளோ பண்ணினேனான்னு எனக்கே தெரியல. ரொம்ப மலைப்பா இருக்கு. ஃபர்ஸ்ட் படம் பண்ணிட்டு இருந்தப்போ கூடவே டிராமாவும் பண்ணிட்டு இருந்தேன். ஒரு நாள் சாயங்காலம் 6 மணி ஆனதும் டைரக்டர்கிட்ட நான் டிராமாவுக்குப் போகணும்ன்னு சொன்னேன். டிராமா வேணுமா சினிமா வேணுமான்னு கேட்டாரு. அன்னைக்கு அவரு என்னை டிராமாவுக்கு போகவே விடல. இனிமே சினிமாதான். அப்படின்னா அதை மட்டும் வச்சுக்கோங்க. ரெண்டு வேலையும் ஒரே நேரத்துல வேண்டாம்னு சொன்னாரு. அன்னைக்கு நான் முடிவு பண்ணதுதான். அப்போதுல இருந்து வேலை வேலைன்னே பழகிடுச்சு. அதனாலயே ஃபங்க்ஷன்களுக்கு போற பழக்கம்கூட இருந்தது இல்ல. சினிமாவுக்கு வந்த மூணாவது வருஷத்துலயே என் திருமணம் முடிஞ்சது. கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் எல்லா வசதிகளும் வீட்டுலயே அமைச்சுக் கொடுத்ததால அதிகம் வெளியே போனதில்லை."

**"இத்தனை வருஷங்கள் எவர்லாஸ்ட்டிங் ஃபேம்ல நீடிக்கும் உங்க சீக்ரெட் என்ன?"**

"எனக்கு கிடைச்ச கதாபாத்திரங்கள் அந்த மாதிரி. ஒவ்வொரு கதையும் கதாபாத்திரமும்னு எல்லாரோட எமோஷன்களோடும் ஒண்ணா கலக்குற மாதிரி எனக்கு அமைஞ்ச கதாபாத்திரங்கள்தான் அதுக்கு முக்கிய காரணம்."

அதனாலேயே. இப்போ வரை எல்லாரோட வீடுகள்லயும் நான் இருக்கேன். எனக்கு கிடைச்ச புரொடியூசர்ஸ், ரைட்டர்ஸ், ஆர்ட்டிஸ்ட்ஸ் ஸ்டுடியோவுல வொர்க் பண்ணின லைட் பாய்ஸ் முதல் கொண்டு என் குடும்பம் வரை எல்லாரும் எனக்கு ரொம்ப சப்போர்ட்டிவா இருந்தாங்க."

"சமீபகாலமா வளர்ந்து வர்ற ஹீரோயின்களே பி.ஆர்.ஓ வச்சிருக்காங்க. உங்கள தொடர்பு கொண்டப்போ நீங்களே போனை எடுத்தது ஆச்சர்யமா இருக்கு..!"

"இப்போன்னு இல்ல. அந்தக் காலத்துலயும் எனக்கு பி.ஆர்.ஓ கிடையாது. எப்போவுமே போன் அடிச்சா நான்தான் எடுப்பேன். எனக்கு எது தேவை, எது வேணும் வேண்டாம்னு எனக்குதானே தெரியும். என்னுடைய அசிஸ்டன்ட்டுக்குத் தெரியாது இல்லையா. நானே எடுத்துட்டா ஓகேவா, இல்லையானு சொல்லிடுவேன். அது அதோட முடிஞ்சிடும்."

www.magazine.silampu.com
www.silampu.com

www.magazine.silampu.com

## வடக்கு மண்ணில் சர்வதேச தரம் வாய்ந்த
## Corporate Consultant & Services




### Our Services

- Corporate Consultations
- 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழான வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி கள் (Private Limited Liability Companies) உத்தரவாதத்தால் வரை யறுக்கப்பட்ட கம்பனிகளின் கூட்டிணைப்புகள் (Companies Limited by Guarantee).
- முதலீட்டுசபையின் கீழான கம்பனி பதிவுகள் (Board of Investment)
- Routine and nonroutine Corpoate Secretarial Services
- Societies Ordinance ன் கீழான சங்கங்கள் மற்றும் இலாப நோக்கற்ற அமைப்புகளின் பதிவுகள்.
- வியாபார குறியீடுகள் (Trade Mark இலட்சினைகள் Logos), Palent and Industrial Designs, கண்டுபிடிப்புகள் இலக்கிய படைப்புகளுக்கான பதிப்பரிமைகளை 2003ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க புலமைத்துவ சட்டத்தின் கீழாக காப்பரிமை யளித்தல்.
- கம்பனிகளின் கலைப்பு (Liquidation), பதிவாளர் இடாப்பிலிருந்து கப்பனியின் நீக்குதல் (Stuck off)

### Our Values

- உயர் தொழில் வான்மையான வழிகாட்டல்
- விரைவான சேவை
- Online Service
- வெளிப்படைத்தன்மையான விலையிடல்
- No More Visiting To Colombo

### Regional Offices

#### Jaffna Office

Arul Oli Creations (PVT) LTD
No.73, Brown Road,
Neeraviyadi Pillayar Kovil, Jaffna.

Email : aruloli2014@gmail.com
Phone : 021 221 2580 / 074 150 0745

**Head Office**

ALTER EGOS CORPORATE CONSULTANTS (PVT) LTD
No.291 B/1, Ground floor, DAM street, Hulftsdorp, Colombo 11

Phone : 077 264 9150
Email : alteregos.cc@gmail.com
Twitter : Alteregos10

www.silampu.com

இவ் இதழானது 2021.01.26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை, மாசி – 2021 ற்கான “சிலம்பு” பல்சுவை இணைய இதழாக அருள்ஒளி கிரியேசன்ஸ் பிறைவேட் லிமிரெட் நிறுவனத்தால் வெளியிடப்படுகிறது.